மே. வங்க சட்டசபையில் கூச்சலும் குழப்பமும்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

சென்னை: புரட்டாசி 15உ வெள்ளி (1—10—54)
வெளியூர்: புரட்டாசி 16உ சனி (2—10—54)

மலர்: 2
இதழ்: 94

பணம்கொடுத்து காங்கிரசிற்கு ஆதரவு திரட்டினார்களாம்!

சிக்கிக் கொண்டபொழுது பணத்தைச் சேற்றில் வீசினாராம்!

காஞ்சிபுரம் காங்கிரஸ் முக்கியஸ்தர் மீது குற்றச்சாட்டு!

காஞ்சிபுரத்தை அடுத்துள்ள பரந்தூர் பகுதியில் நடைபெற்ற செங்கல்பட்டு மாவட்டக் கழகத் தேர்தலுக்கு, மேற்படி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை ஒரு அபேட்சகராக நிற்கிறார். அவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் ஒருவர் போட்டியிடுகிறார். சொந்தக் கட்சிக்கு வாக்காளர்களின் ஆதரவு தேடும்வகையில், காஞ்சிபுரம் காங்கிரஸ் முக்கியஸ்தரான உமாபதி என்பவர், வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்துக் கொண்டிருக்கும்போழுது பிடியுண்டதாகவும், அதுசமயம் தம் கையில் வைத்திருந்த பணத்தைச் சேற்றில் வீசி எறிந்துவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

காஞ்சீபுரம், செப். 30— செங்கல்பட்டு ஜில்லா போர்டு தேர்தலை ஒட்டி காஞ்சிபுரம் வட்டம் பரந்தூர் பிர்க்காவில் நேற்று நடைபெற்ற வாக்குப் பதிவின் போது காங்கிரஸ் அபேட்சகருக்கு ஓட்டுக்களை பணம் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கையில், காங்கிரஸ் உறுப்பினர்களின் ஏஜண்டுகளான உமாபதி, நடராசன் ஆகியவர்கள் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

அந்தத் தொகுதியில் சுயேச்சை உறுப்பினர்களாக தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலையும், வைராமனும் காங்கிரஸ் உறுப்பினரான எஸ். கனகு என்பவரை எதிர்த்துப் போட்டியிடுகின்றனர்.

காங்கிரஸ் உறுப்பினருக்குப் பணம் கொடுத்து ஓட்டுக்களை விலைக்கு வாங்கிய உமாபதியையும் நடராஜனையும் தோழர் சி. வி. எம். அண்ணாமலையின் ஏஜண்டுகள் கண்டுபிடித்தனர் என்று தெரிகிறது.

கிராம அதிகாரியிடம் அவர்கள் இருவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

பிடிபட்ட உடனே தோழர் உமாபதி தன் கையில் வைத்திருந்த பணத்தை சேற்றில் எறிந்துவிட்டாராம். அதுவும் எஞ்சியிருந்த ரூ. 16-7-6ம் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரிகிறது.

மேற்படி இருவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடக்கிறது.

மகாநதி பாலம் அமைப்பதில் பல லட்சம் ரூபாய் பாழாக்கப்பட்டுள்ளது!

வேலையே செய்யாதவருக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டதாகப் பொய்க் கணக்கு!

பண்டிதரின் ஆளும் திறனுக்கு இன்னுமொரு சான்று!

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை

மத்திய அரசாங்கம் நியமித்த பொதுக் கணக்குக் குழு, ஹிராகுட் அணைக்கட்டுத் திட்டத்தின்படி மகா நதி பாலம் கட்டுவதில் நிகழ்ந்துள்ள ஊழல்கள் குறித்த சாம்பேகார் குழு, விசாரித்தறிந்தவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஒழுங்கு தவறிய, நடைமுறை விதிகளுக்குப் புறம்பான ஊழல்கள் இந்த மகா நதிப் பாலம் அமைப்பதில் நிகழ்ந்துள்ளதாகக் குழுவினரால் காணப்பட்டிருக்கிறது.

வேலை துவங்குமுன், விரிவான திட்டங்கள் முழுவதும் தீட்டப்படாமலேயே வேலை ஆரம்பித்ததினாலும் இவ்வூழல்கள் நிகழ்ந்துள்ளன. வேலை துவங்கிய காலத்தில், கணக்குகள் வெகுமோசமான நிலையில் எழுதப்பட்டிருக்கின்றன.

உள்ளூரிலேயே கிடைக்கக் கூடிய சாதாரண வேலை செய்யும் தொழிலாளர்கள் வேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கின்றனர். உண்மையில் வேலையே செய்யாதவர்கள் பெயர்களும் எழுதப்பட்டு அவர்களுக்கும் சம்பளம் தந்ததாகக் கணக்கெழுதப்பட்டிருப்பதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

இது வகையில் இந்தக் குற்றங்களுக்குக் காரணமாயிருந்தவர்கள் மீது சர்க்கார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது கண்டு வருந்துவதாகவும் பொது கணக்குக் குழுவினர் கூறியுள்ளனர்.

இனிமேலாவது குற்றம் புரிந்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க, சம்பந்தப்பட்ட இலாக்கா மந்திரிகள் முன்வர வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இவ்வளவுதான் தேவைப்படலாம் என்ற மதிப்பீடு ஆரம்பத்திலேயே செய்யப்படாததின் விளைவு, மகா நதி பாலம் அமைப்பதற்காக செலவை பல லட்சங்களால் உயர்த்தியுள்ளது. இது பற்றியும் சர்க்கார் உடன் கவனிக்க வேண்டும் என்றும் கணக்குக் குழு கூறியுள்ளது.

ஆயுதக் கட்டுப்பாடு

பெல்ஜியத்தின் சமரச திட்டம்

ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவது பற்றி லண்டனில் நடைபெற்றுவரும் 9 வல்லரசு மாநாட்டில், பிரெஞ்சு பிரதமர் மெண்டஸ் பிரான்சின் கமிட்டி திட்டங்களுக்கும், அதை எதிர்க்கும் மற்ற நாடுகளின் திட்டங்களுக்கும் சரிநிலைமையாக இருக்கும் திட்டமொன்றை பெல்ஜியம் அயல்நாட்டு மந்திரி சமர்ப்பித்தார்.

முதலமைச்சரின் வழியில் பொதுவுடைமையினர்!

தகுதியற்றவர் என்று சபைத் தலைவர் மீது குற்றச்சாட்டு!

சட்டசபை மதிப்பு காற்றில் பறந்தது!

மேற்கு வங்க சட்டசபையில் அமளிதுமளியான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. சபாநாயகரின் உத்திரவுகளை எதிர்க் கட்சியினர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டிருக்கின்றனர். சர்க்கார் தரப்பின் முதன் மந்திரிகூட சபைத் தலைவரின் வார்த்தைகளுக்கு மதிப்பளிக்கத் தவறி இருக்கிறார்.

சபையின் கௌரவம், இத்தகைய நிகழ்ச்சிகளால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற வாரத்தில் இதே மே. வ. சட்டசபையில், காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர், 'கம்யூனிஸ்டு உறுப்பினர்களைக் கன்னத்தில் அறைய வேண்டும்,' என்று கூறியதும், உடனே கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர் எழுந்து, 'காங்கிரஸ் உறுப்பினர்களை செருப்பால் அடிக்க வேண்டும்,' என்று பதில் சொன்னதும் பின்னர், இரு கட்சித் தலைவர்களும் தங்கள் கட்சிகளின் சார்பில், சபையிடம், முறை தவறிப் பேசியமைக்காக மன்னிப்புக் கோரியதும் இந்த சம்பவங்களுடன் தொடர்பு படுத்திப் பார்க்கப்படுகிறது.

'அபிவிருத்திக் கார்ப்பரேஷன் மசோதா' மீது நடைபெற்ற விவாதத்தின்போதே மே. வ. சட்டசபையில் இந்த விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

அபிவிருத்திக் கார்ப்பரேஷன் மசோதாவை எதிர்த்து கல்கத்தா தினசரி எழுதியுள்ள தலையங்கம் ஒன்றை சரோஜ் ராய் என்ற எதிர்க்கட்சி உறுப்பினர் வெகு விரிவாகப் படித்துக் காட்ட ஆரம்பித்தார்.

உடனே முதன் மந்திரியான டாக்டர் ராய் எழுந்து, மசோதாவை ஆதரித்து வேறொரு தினசரிப் பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தைப் படித்துக் காட்ட ஆரம்பித்தார்.

சபைத் தலைவர் குறுக்கிட்டு, பத்திரிகைத் தலையங்கங்களை அவ்வாறு விரிவாக சபையில் படித்துக் காண்பித்துக் கொண்டிருக்கக் கூடாதெனக் கூறி முதன் மந்திரியை உட்காருமாறு கூறினார்.

முதன் மந்திரி சபாநாயகர் வார்த்தைகளை மதியாது தொடர்ந்து படிக்க ஆரம்பித்தார்.

சபாநாயகர் மீண்டும் குறுக்கிட்டு, முதன் மந்திரிக்குத் தரப்பட்டிருந்த நேரம் முடிந்துவிட்டதால், அவர் உடனே படிப்பதை நிறுத்திவிட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

என்றாலும், மீண்டும் சபைத் தலைவரின் உத்திரவு அலட்சியம் செய்யப்பட்டதால் சபையில் குழப்பம் தோன்றியது. சபைத் தலைவரான குப்தாவும் முதன் மந்திரியும் பேசிக்கொண்டே இருந்தனர்.

இருதரப்பு உறுப்பினர்களும் மேஜைகளில் ஓங்கித் தட்டியும், கூச்சலிட்டும் ஆரவாரம் செய்தனர்.

இதற்கிடையில், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரான ஜோதிபாசு என்பவர் எழுந்து, ஒழுங்குப் பிரச்னை ஒன்றைக் கிளப்பி, சபையின் நடவடிக்கைகள் மாலை 4 மணியுடன் முடிவடைய வேண்டும் என்று ஏற்கனவே நான் கூறினேன். அதன்படி இப்போது மணி 4-ஆகி விட்டது. எனவே, சபையை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டார்.

சபைத் தலைவர் குறுக்கிட்டு, விஷயத்தை வளர்த்திக் கொண்டிராமல் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டார்.

ஆனால், தோழர் பாசு தொடர்ந்து பேச ஆரம்பிக்கவே சபைத் தலைவர் அவரை உட்காருமாறு கோரினார்.

ஆனால், தோழர் பாசு 'நீங்கள் எதிர்க் கட்சியினரை இம்முறையில் நடத்திக்கொண்டே செய்வது, நான், சபைத் தலைவருக்குத் தரவேண்டிய மதிப்பைத் தராது செய்யுமாறு தூண்டுகிறது; எனவே, தாங்கள் உட்காருங்கள்; நான் பேசியே தீரவேண்டும்,' என்றார்; 'சபையின் நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற எதிர்க் கட்சியினரிடம் இம்மாதிரி நடந்து கொள்ளாதீர்கள்,' என்றும் கேட்டார்.

சபைத் தலைவர் குறுக்கிட்டு, 'நீங்கள் தயவு செய்து உட்காரமாட்டீர்களா?' என்று கேட்டார்.

ஆனால், உறுப்பினரோ கொதித்தெழுந்து, 'உட்கார முடியாது; நீங்கள் உட்கார்ந்துவிட்டு, என்னைத் தொடர்ந்து பேச அனுமதித்தாலன்றி, நான் உட்காரமாட்டேன்,' என்று மறுத்துவிட்டார்.

சபைத் தலைவர், 'ஒழுங்கு, ஒழுங்கு,' என்று கத்தினார்.

உறுப்பினரோ, 'ஒழுங்காவது; நீங்கள்தான் இங்கே ஒழுங்கைக் கடைப்பிடிக்கவில்லையே,' என்று கூறினார்.

சபைத் தலைவரான குப்தா, "இந்த வார்த்தைகளை உறுப்பினர் 'வாபஸ்' வாங்க வேண்டும்," என்று [illegible]

உறுப்பினர், வாபஸ் வாங்க மறுத்தது [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 1—10—54 வெள்ளி

காமராசர் கவனத்திற்கு!

வருகிற நவம்பர் துவக்கத்தில், சோவியத் ரஷ்யாவின் இருந்து இரும்பு எஃகுத் தொழில் நிபுணர்கள் குழு ஒன்று இந்தியத் துணைக் கண்டத்திற்கு வர இருக்கிறது. இரண்டாவது இரும்புத் தொழிற்சாலை ஒன்றைத் துவக்கி வைப்பதற்கான தக்கதோர் இடத்தை ஆராய்ந்து தேர்ந்தெடுக்கும் முயற்சியில் அந்நிபுணர் குழு ஈடுபடப் போவதாகத் தெரிகிறது.

இரும்புத் தொழிற்சாலைக்குத் தக்கதோர் இடத்தை நிர்ணயிப்பதற்கு நிபுணர் குழுவை அனுப்பி வைப்பதோடு, புதிய இரும்புத் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் பொருள் உதவியையும், குறைந்த வட்டிக்குக் கொடுத்துதவவும் சோவியத் ரஷ்யா முன்வந்திருக்கிறது. தேவைப்படும் இயந்திர சாதனங்களையும், நிபுணர்களையும் தருவதற்கும் சோவியத் ஒப்புக் கொண்டு இருக்கிறது. இந்த நற்செயலுக்கு சோவியத் ரஷ்யாவை மனமாரப் பாராட்டுகிறோம்.

புதிதாக இரும்புத் தொழிற்சாலையைத் துவக்குவதற்கான துவக்க வேலையை மேற்சொன்ன சோவியத் நிபுணர் குழு இந்தியத் துணைக் கண்டம் வரவிருக்கிறது என்ற செய்தி வெளியான உடன், மைசூர் சுரங்க உரிமையாளர் சங்கம் புதிய இரும்புத் தொழிற்சாலையைத் துவக்குவதற்கு, தங்கள் மாநிலத்தில் உள்ள பெல்லாரி தக்கதாக உள்ளது என்பதை, அந்நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து அறிய வேண்டும் என யூனியன் சர்க்காரை வற்புறுத்திக் கேட்கத் தொடங்கிவிட்டது. யூனியன் சர்க்காரில் சுரங்க மந்திரியாக இருக்கிற கே. சி. ரெட்டியார், மைசூர் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதை நினைக்கும்பொழுது, மைசூர் சுரங்க உரிமையாளர் சங்கத்தின் கோரிக்கையானது, அவ்வளவு இலகுவில் அலட்சியப் படுத்தப்பட்டுவிடும் என எவராலும் எண்ண முடியாது. ஏதோ கொஞ்சம் நம்பிக்கைக்கு இடமுண்டு என்றுதான் ஒவ்வொருவரும் கருதுவர்.

மக்கள் சபையில், புதிய நிபுணர் குழுவின் வருகை பற்றி எழுந்த கேள்வியின்போது மத்திய பிரதேசத்தின் இரண்டாவது இரும்புத் தொழிற்சாலையைத் துவக்குவதற்கு வேண்டிய வசதி ஏராளமாக இருப்பதால், அம்மாநிலக் கோரிக்கையும் சீர்தூக்கிப் பார்க்கப்படும் என சுரங்க மந்திரி பதில் கூறியுள்ளார். இதை ஒருபொருட்டாக வைத்துக்கொண்டு நோக்கும்போது, மத்திய பிரதேசத்தின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவேதான், ஒருவேளை ரஷ்ய நிபுணர் குழுவை யூனியன் சர்க்கார் வரவழைத்திருக்கிறதோ என்றுகூட எண்ண வேண்டியதாக இருக்கிறது. இப்படி எண்ணுவதற்குத் தக்க சான்று இல்லாமலும் இல்லை.

பண்டித நேரு சர்க்காரால் ஆரம்பிக்கப்பட வேண்டுமென முன் வந்த முதல் இரும்புத் தொழிற்சாலையை, தங்கள் தங்கள் மாநிலங்களில்தான் ஆரம்பிக்க வேண்டுமென, மத்திய பிரதேசம், ஒரிசா, பீகார் ஆகிய மூன்று மாநிலங்களும் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டன.

மேற்படி போட்டியில் புதிய இரும்புத் தொழிற்சாலையைத் துவக்கும் பேறு, ஒரிசா மாநிலத்திற்குக் கிடைத்துவிட்டது.

மேற்குறிப்பிட்டுள்ள மூன்று மாநிலங்களில் இரும்புத் தொழிற்சாலையைத் துவக்குவதற்குத் தேவைப்படும் வசதி, எந்த மாநிலத்தில் கூடுதலாக இருக்கிறது என்பதைக் கண்டறிய பொறுப்பேற்றுக் கொண்ட நிபுணர் குழு, மத்திய பிரதேசத்தையே முதன் முதலாகத் தேர்ந்தெடுத்ததாகவும், ஏதோ சொல்லத்தகாத குள்ளநரிக் குறுக்கீட்டால், அக்கருத்து பிறகு மாற்றப்பட்டுவிட்டதாகவும், மத்திய பிரதேசப் பிரதமர் பண்டிதர் சர்க்கார் மீது போர் தொடுத்தார். இதுபற்றி, அம்மாநில சட்டசபையிலும் யூனியன் சர்க்காருக்கு அர்ச்சனை நடந்தது. கட்சிப் பாகுபாடு இல்லாது, அந்த அர்ச்சனை ஒருமனப்பட்டதாக இருந்தது. முதல் மந்திரியும் 'மத்திய பிரதேசத்திற்கு ஒரு இரும்புத் தொழிற்சாலை—இல்லையேல் முதல் மந்திரி பதவி இராஜிநாமா,' என வெளிப்படையாகக் குறிப்பிட்டார். அதுமட்டுமல்ல; யூனியன் சர்க்கார் முதலில் கொண்ட முடிவை மாற்றிக் கொண்டதற்கான இரகசியங்களையும் தக்க ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தப் போவதாகவும் அவர் அப்போது பண்டிதர் சர்க்காரை அச்சுறுத்தியுள்ளார். இச்சென்ற கால சம்பவத்தையும், மக்கள் சபையில் சுரங்க மந்திரி கூறியுள்ளதையும் ஒப்பு வைத்துப் பார்க்கின்ற எவரும், நாம் மேலே கூறியுள்ளவாறு எண்ணுவதற்கு இடமிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டே தீருவர் என்பதில் துளியும் ஐயமில்லை. தங்கள் மாநிலங்களின் பூமிக்கடியில் உள்ள இரும்பைத் தோண்டி எடுத்து, தொழில் துறைகளை விரிவடையச் செய்து, வேலையில்லாமையைப் போக்கி, மக்களுக்கு நல்வாழ்வு தரும் முயற்சியில் ஏற்கனவே மத்திய பிரதேசமும், பீகாரும் போட்டியிட்டுக் கொண்டு இருக்கின்றன. மைசூர் சுரங்க உரிமையாளர் சங்கமும் அம்முயற்சியில் தலையிட்டு இருக்கிறது. அச்சங்கத்தின் விருப்பத்தை ஒப்பி, இதற்கு மைசூர் சர்க்கார் யூனியன் சர்க்காருக்குக் கோரிக்கை ஒன்றை அனுப்பியிருக்கவும் இருக்கக்கூடும். இதுவரை வேண்டுகோள் விடவில்லையானாலும், இனியாவது மைசூர் சர்க்கார் இத்துறையில் முயலத்தான் போகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மற்ற மாநிலங்கள் தங்கள் தங்கள் நிலப்பரப்பில் உள்ள மக்களின் செல்வம் பெருகுவதற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும், மக்களின் சுகவாழ்விற்கும், மத்திய சர்க்காரைக் கசக்கிப் பிழியும் போது, சென்னை சர்க்கார் மட்டும் ஏன் கண்மூடி மவுனியாக இருக்க வேண்டும்? அந்த மௌன நிலையில் உள்ள உட்பொருளை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதற்கு விளக்கம் கூற ஒரு குல்லூகபட்டர் தேவைப்படுகிறாரோ என்னவோ?

சேலம் மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலைப் பகுதியில், பூமிக்கடியில் இரும்பு இருப்பதாக முன்னரே நிபுணர்களால் கண்டறிந்து கூறப்பட்டிருக்கிறது. அங்கு கிடைக்கக்கூடிய இரும்பின் பரிமாணம் குறைந்ததோ அல்லது அறவே இல்லாமலோ இருப்பதாக ஆராய்ந்து முடிவு கட்டப்பட்டு இருக்கிறது.

பூமிக்கடியில் உறங்கிக் கிடக்கும் 'ஏழையின் தங்கத்தை'த் தோண்டியெடுத்துத் தொழில் படுத்தினால், அப்பகுதி மக்களுக்குள்ள வறுமையை விரட்டியடிப்பது சுலபமாகும் என்பதோடு, திராவிடத் திறனும் உயரவும் வழி ஏற்படும். இதுபற்றி அகில இந்திய உற்பத்தியாளர் சங்கத்தினுடைய சேலம் கிளையின் செயலாளரான சத்தியநாராயணன் என்பவர், நேற்றைய 'இந்து' இதழில் கடிதம் ஒன்று வரைந்துள்ளார். அதில் அவர் சேலத்தில் கிடைக்கும் இரும்பு கலந்த மண்ணிலிருந்து பெறும் இரும்பின் சதவிகிதம் குறைவாக இருக்கிறது எனக் கூறப்படுவது, கொஞ்சமும் பொருந்தாது என்றும், பாரபட்சமற்ற முறையில் ஆராய்ந்தால் அது பொய்ப்பிக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுவுமல்லாமல் அங்கு கிடைத்த இரும்பைக் கொண்டு, சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறந்த பீரங்கிகள் செய்யப்பட்டு உள்ளன என்ற சரித்திரச் சான்றையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சேலத்தை அடுத்துள்ள தென்னாற்காடு பகுதியில் நெய்வேலியில் வெட்டியெடுக்கப்பெறும் நிலக்கரியைக் கொண்டு, சேலத்தில் பூமிக்கடியில் கிடைக்கும் இரும்பை சுத்தப்படுத்தினால், அதனால் உருவாக்கப்படும் இரும்பு சுவீடன் நாட்டு இரும்பைப்போல் மிக மிக உயர்ந்ததாக இருக்கும் எனவும் எடுத்துக் காட்டியுள்ளார்.

சேலத்தில் கிடைக்கும் இரும்பு மண்ணிலடங்கியுள்ள இரும்பின் அளவு குறைவானதாக இருப்பதால், அதைத் தோண்டியெடுப்பதில் ஆகும் செலவு, அதனால் ஈடுசெய்ய முடியாது என்று கூறப்படும் கூற்றை சுட்டிக் காட்டுகிறார் அவர். அதற்குச் சமாதானமாக, வடாற்காட்டிலிருந்து வரவழைக்கப்படும் இரும்புப் பொருள்களுக்குத் தரப்படும் போக்குவரத்துச் செலவைக் கருதும்பொழுது, சேலத்து இரும்பைத் தோண்டியெடுப்பதில் ஏற்படும் செலவு குறைந்துவிடும் எனவும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

வரவிருக்கிற சோவியத் நிபுணர்களைக் கொண்டு, சேலத்தில் உள்ள இரும்பின் தரத்தை ஆராய யூனியன் சர்க்கார் முன்வரவேண்டுமெனவும் அதற்கான முயற்சியை சென்னை சர்க்கார் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அக்கடிதத்தில் சத்திய நாராயணன் வற்புறுத்தியுள்ளார்.

சேலத்தில் சோம்பிக் கிடக்க விடப்பட்டு இருக்கும் இரும்பைத் தோண்டியெடுத்து, மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நமது தி. மு. கழகம் பலமுறை எழுப்பி இருக்கிறது. அதை யூனியன் சர்க்காரும், சென்னை சர்க்காரும் ஒதுக்கித் தள்ளியே வந்திருக்கின்றன.

சென்றது செல்க. இனியாவது சென்னை சர்க்கார் இம்முயற்சியை உடனடியாக மேற்கொண்டு, வெற்றிபெற பாடுபட வேண்டும். அத்தகு முயற்சியை மேற்கொள்ள, ரஷ்ய நிபுணர்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்கு வருவது நல்லதோர் வாய்ப்பாகும். இந்த அரிய வாய்ப்பை காமராசர் கவனத்துக்குக்கொண்டு வருகிறோம். மத்திய பிரதேச முதன் மந்திரியை முன்மாதிரியாகக் கொண்டு, பண்டிதர் சர்க்காரை தட்டிக் கேட்கத் துணிவு கொள்ள வேண்டும் சென்னை முதன் மந்திரி என்பதே நமது வேண்டுகோள்!

ஒழுங்கு தவறிய அதிகாரிகளைத் தண்டிப்பதில் தாமதம்!

வாங்கிய கருவிகள் துருப் பிடித்துக் கிடந்தன

மத்திய டிராக்டர் நிறுவன ஊழல்கள்

"கடமை தவறி, பொதுப் பணத்தைப் பாழ்படுத்திய அதிகாரிகளின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் அளவிற்கு மீறிய தாமதம் ஏற்பட்டிருக்கிறது,"

என்று, மக்கள் சபையில் வைக்கப்பட்ட பொதுத் தணிக்கைக் குழுவின் 12-வது அறிக்கை குறிப்பிடுகிறது.

1946-ம் ஆண்டில், பம்பாயில் உள்ள பர்ஷோத்தம் பட்டேல் கம்பெனியில் 250 செட்டுகள் விவசாயக் கருவிகள் வாங்கியது பற்றியே தணிக்கைக் குழு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

மாதிரியை அடிக்கடி மாற்றி ஆர்டர்களை அனுப்பியதும், ஆர்டர் கொடுப்பதற்கு முன்னர் ஒப்பந்தத்தை சரிவரக் கணிக்காதது மிகவும் கண்டிப்பதாகும், இது பல ஒழுங்கீனங்களுக்கு இடம் கொடுக்கும் செய்கை என்றும் குழு கண்டித்துள்ளது.

மாதிரி சாமான்களை மாற்றுவதோ, அல்லது பொருளாதாரப் பிரச்சினைகளையோ, ஜூனியர் அதிகாரிகளே செய்து முடிப்பது கூடாதென்றும், பொருளாதார ஆலோசகர்களின் முன் அனுமதியைப் பெற்றுத்தான் முடிவு செய்யவேண்டும் என்றும் தணிக்கைக் குழு தனது குறிப்பில் எடுத்துக் காட்டியிருக்கிறது.

"பொதுப் பணத்தை ஒழுங்கீனமாகச் செலவிட்டவர்கள், சாமான்கள் சப்ளை செய்யும் கம்பெனிகளைத் தேர்ந்தெடுப்பதில் பாரபட்சத்துடன் நடந்து கொண்டவர்கள், கண்டிராக்டர்களோடு முடிக்கப்பட்டு சப்ளை செய்யப்பட்ட சாமான்களை பரிட்சித்து சோதனையிட்டு பெற்றுக் கொள்ளாதவர்கள் ஆகிய சர்க்கார் அதிகாரிகள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் சர்க்கார் மிகவும் தாமதம் செய்துள்ளனர்; இச்செய்கை வெறுக்கத்தக்கது," என்று தணிக்கைக் குழு கூறியுள்ளது.

தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார எல்லைக்கு அப்பால் சென்று பொருளாதாரப் பிரச்சினைகளை முடித்து, பின்னர் அந்தப் பொறுப்பை மந்திரிகள் மீது சுமத்த முயன்றவர்களின் மீதும் நடவடிக்கை எடுப்பது தாமதமாகி இருக்கிறது.

போபாலில், பைராகர் என்னுமிடத்தில் உள்ள மத்திய சர்க்காரின் டிராக்டர் தொழிற்சாலைக்கு தணிக்கைக் குழுவினர் சென்றபோது பர்ஷோத்தம் பட்டேல் கம்பெனியிடம் வாங்கிய விவசாயக் கருவிகள் கேட்பாரற்றுத் துருப்பிடித்துக் கிடப்பதைக் கண்டனர்.

புது டில்லியில் உள்ள தொழிற்சாலையில் உழவுக்கென வாங்கிய கருவிகள் அனைத்தும் தவறுதலாக அமைக்கப்பட்டும், மோசமான இரும்பினாலும் செய்யப்பட்டிருக்கின்றன என்று தொழிற்சாலைக்கென்று பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட நிபுணர் கூறினார் என்று தெரிகிறது.

அதுபோல், பைராகர் நகர் தொழிற்சாலை நிர்வாகிகள், சர்க்கார் வாங்கிய விவசாயக் கருவிகள் அனைத்தும், வேலை செய்யும்போது உடைந்து போகின்றன என்று குறிப்பிட்டனராம்.

ஆகவே, இதுபோன்ற கருவிகளை மத்திய டிராக்டர் ஸ்தாபனம் வாங்கக்கூடாது என்றும், இவைகளின் பயன்பற்றிய கம்பெனியின் ஏற்பாட்டு அவைகளை வாங்கலாம் என்று மாநில சர்க்கார்கள் நிச்சயமாகத் தெரிவித்த பின்னரே விவசாயக் கருவிகளை வாங்க வேண்டும் என்றும் பொதுத் தணிக்கைக் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாண்டு ஜனவரித் திங்களிலிருந்து இதுவரை இந்தியாவிலிருந்து 109 கலாச்சார, கல்வித் தூதுக் குழுவினர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர் என்று மக்கள் சபையில் பிரதமர் நேரு தெரிவித்தார்.

டெல்லி தெருக்களில் தமிழ்ப் பெண்ணின் தவிப்பு

இரு குழந்தைகளுடன் பிச்சையெடுக்கும் கோரம்

நகரங்களில் வாழும் தமிழர்களின் அவல நிலைமையைப் பற்றி முன்பொரு தடவை குறிப்பிட்டிருக்கிறேன். இதோ மற்றொரு சான்று.

புது டில்லிக்கு 'கன்னாட் சர்க்கஸ்' என்பது இருதயம் போன்றது. முக்கியமான வியாபார நிலையங்களும், சினிமாக் கொட்டகைகளும் இங்கேதான் உண்டு.

இங்குள்ள ரீகல் சினிமாக் கொட்டகைக்கு முன் நான் ஒரு தமிழ்ப் பெண்ணைப் பார்த்தேன். வயது 24-க்குள் இருக்கும்; எண்ணெய் அறியாத கூந்தல்; அள்ளி வாரி கொண்டை போட்டிருந்தாள்; நல்ல கருப்பு நிறம்; அகண்ட முகம்; அழுக்கேறிய உடம்பு; முழங்கால் வரை கூடத் துணியில்லை; மார்பை மூடியும் மூடாததும் சேலை; இடுப்பில் ஒரு வயதுள்ள குழந்தை; அவளைப் பற்றிக் கொண்டு நின்றது சுமார் மூன்று வயதுள்ள ஒரு பெண் குழந்தை; பிறந்த கோலத்துடன், அந்த அழுக்கிலும் மாநிற உடையிலும், அவள் ஒரு அழகிய பெண் என்று யாவரும் காணலாம். அவள் வருவோர் போவோரிடம் ஓடி ஓடிப் பிச்சை எடுத்தாள்; கையை நீட்டிக் கேட்டாள். "ஐயா, ஐயா" "சாமி சாமி" என்றாள். அவள் கோலத்தையும், அவள் குழந்தைகளின் ஒட்டிய வயிற்றையும் கண்டவர்கள் மனமிரங்காமலிருக்க முடியாது; பரிதாபப்படாமலும் இருக்கமுடியாது.

வேலையில்லாமல், குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் மனமுடைந்து வெட்கப்பட்டு ஓடிப்போன புருஷன்; வயிற்றுப் பிழைப்புக்குப் பிச்சை எடுக்காமல் அந்தப் பெண் என்ன செய்வாள்? ஆனால், அந்நியர் முன் வந்துதான் பிச்சை எடுக்கவேண்டுமோ? இதுதானா தமிழகத்தின் மேன்மை நிலை?

—(28-9-54 'தமிழ் நாடு' இதழில் எம். என். தரும் தகவல்)

கிழக்கு பாகிஸ்தான் நிலைமை

பாக். மந்திரி சபையில் பிளவு

'கராச்சி டைம்ஸ்' தரும் செய்தி

கராச்சி, செப். 29—

கராச்சியிலிருந்து வெளியாகும் ஆங்கில இதழான 'டைம்ஸ் ஆப் கராச்சி' கிழக்கு வங்கத்திலுள்ள ஐக்கிய முன்னணி கட்சியை வெளிப்படையாக ஆதரிக்கிறதாம்.

பாகிஸ்தான் மத்திய சர்க்காரின் அமைச்சர்களாய் முன்னாள் அமைந்த குர்மானி என்பவரும், பஞ்சாபின் முதல் அமைச்சர் சர் பிரோஸ்கான் நூனும் இப்பத்திரிகையை ஆதரிப்பதாகத் தெரிகிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் உள்ள கிழக்கு வங்க முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் உடனே இராஜிநாமா செய்ய வேண்டுமென்றும், பாகிஸ்தானுக்கு புதிய அரசியல் நிர்ணய சபை ஒன்று தேவை என்றும், கிழக்கு வங்க ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தலைவர்கள் சிலர் விடுத்துள்ள கூட்டறிக்கை ஒன்றை 'டைம்ஸ் ஆப் கராச்சி' பிரசுரித்துள்ளது.

'டைம்ஸின்' இக்கருத்தினைக் கண்டு கராச்சி அரசியல் வட்டாரங்கள் மிகவும் குழப்பமடைந்துள்ளன என்று தெரிகிறது.

இப்பத்திரிகை ஐக்கிய முன்னணிக்குத் தரும் ஆதரவை, முகமது அலி மந்திரி சபையில் உள்ள சில அமைச்சர்கள் தரும் ஆதரவு என்று இங்கே கருதப்படுகிறதாம்.

'டைம்ஸ்' பத்திரிகை தருகிற ஆதரவைப் பார்க்கும்போது, பொதுமக்கள், 'கிழக்கு வங்க ஐக்கிய முன்னணிப் பிரச்சினையில் பாக். மந்திரி சபையில் கருத்து வேற்றுமை நிலவுகிறது,' என்று நிச்சயமாக எண்ணுகின்றனர்.

கிழக்கு வங்கத்திற்கு அதிக அளவு அதிகாரங்கள் தருவதில் தான் பாகிஸ்தான் மந்திரி சபையில் கருத்து வேற்றுமை நிலவுகிறது என்று நம்பப்படுகிறது.

கங்கை பாலம் கட்ட 11,000 டன் உருக்கு இரும்பு

பாட்னாவுக்கருகில் கங்கைமீது ஒரு ரெயில்—சாலை பாலம் அமைக்கும் பொறுப்பை ஓர் இந்தியா—பிரிட்டன் கூட்டு நிறுவனத்திடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம், 35,00,000 பவுன் செலவில் 13 கண்களுள்ள இரும்புப் பாலத்தை அமைக்கும். இதற்குச் செலவாகும் சுமார் 11 ஆயிரம் டன் உருக்கு—இரும்பில் பெரும் பகுதி பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்படும். பீகார் பகுதியில் அடிக்கடி பூகம்ப அதிர்ச்சி ஏற்படுவதால், அதிர்ச்சியினால் சேதமடையாதபடி பாலம் நிர்மாணிக்கப்படும்.

ஜெர்மன் பிரச்னை

பிரான்ஸ் பிரதமர் திட்டம்

லண்டனில் நடைபெறும் ஐரோப்பிய ஆயுதக் கட்டுப்பாடு பற்றிய 9 வல்லரசுகள் மாநாட்டில், பிரெஞ்சுப் பிரதமர் மெண்டஸ் பிரான்ஸ், ஜெர்மனியிலுள்ள 'ருர்' எனும் பகுதியில் மிகுந்த அளவில் ஆயுதங்கள் உற்பத்தி செய்வதைத் தடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

மாநாடு கூடுவதற்கு முன் மெண்டஸ் பிரான்சும், மேற்கு ஜெர்மன் பிரதமரும் சந்தித்து, தொழில் வளம் மிக்க 'சார்' பகுதி பற்றி ஜெர்மனிக்கும் பிரெஞ்சுக்குமிடையே நெடுங்காலமாக இருந்துவரும் தகராறுக்குப் புதுக் காரணம் காண்பது பற்றி விவாதித்தனர் என்றும் தெரியவருகிறது.

'சார்' பிரச்சினை முதன் முதல் தீர்க்கப்பட்டால் தான், ஜெர்மனியை மீண்டும் ஆயுதபாணியாக்கும் திட்டத்தை ஒப்புக்கொள்ள முடியும் என்று மெண்டஸ் பிரான்ஸ் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

கலை வளர்ச்சிக் கழக துவக்க விழா

சென்னை—திருவொற்றியூரில், 17—9—54 மாலை 6-30 மணியளவில் தோழர் 'சாரதா' அவர்களால், மேற்படி கழகத் திறப்பு விழா நடைபெற்றது.

26-9-54 காலை 10-மணிக்கு நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ஆதி; துணைச் செயலாளர்: தே. குமரேசு; பொருளாளர்: இரா. இளமாறன்; மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின் கழகச் சார்பில் ஓர் இசை இரவுப் பள்ளி நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஏ. கோவிந்தசாமியை ஆதரித்து நடிப்புப் புலவர் இராமசாமி

வழக்கறிஞர் இளம்வழுதியும் கலந்துகொண்டார்

28—9—54 மாலை 6 மணிக்கு, தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் விக்கிரவாண்டி தேர்தலுக்குப் போட்டியிடுவதை ஆதரித்து விழுப்புரத்தை அடுத்த கஞ்சனூரில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமியும், வழக்கறிஞர் இளம்வழுதியும் பேசினார்கள்.

தோழர் இளம்வழுதி பேசுகையில், காங்கிரஸ் ஆட்சி, ஏழைகளுக்காக எந்தவிதத்திலும் நிர்வாகத் திறமையைக் காட்டவில்லை என்பதை பல ஆதாரங்களுடன் நிரூபித்து, மேலும் காங்கிரசை ஆதரிப்பது நாட்டின் நன்மையை ஒத்திவைப்பதாகுமென எடுத்துக்காட்டினார்.

அடுத்து, நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி பேசியதாவது:—

"கலைஞனுக்கு ஏன் இந்த வேலை என்று சிலர் நினைக்கலாம். நண்பர் கோவிந்தசாமியும் ஒரு வகையில் கலைஞர்தான்; நாடு, நாட்டு மக்களும் முன்னேற்றமடைய, கலையும், பொதுச் சேவையும் பயன்படுகிறது; இது மறுக்க முடியாத உண்மை. நாட்டு முன்னேற்றத்திற்கு வழி வகுப்பவர்கள் நாங்கள்; அதனால் தான் அவரை ஆதரித்துப் பேச வந்துள்ளேன்.

அதுமட்டுமல்ல; நண்பர் கோவிந்தசாமி பொதுவாக நாட்டு மக்களுக்குப் புதியவரல்ல; அவர் சட்டசபையிலே நாட்டின் நலனுக்கு அரும்பாடுபட்டவர்; அவர் குரல் ஒலிக்காத நாள் இல்லை; நேற்றுவரை அவருடன் இருந்து காங்கிரசை எதிர்த்தவர்கள், இன்று, காங்கிரசில் சேர்ந்துவிட்டார்கள்—இல்லை பதவிக்காகத் தாவிவிட்டார்கள். பாவம்! அவர்கள் தப்புக் கணக்குப் போடுகிறார்கள்; இன்றும் காங்கிரஸ் பொது மக்களுடைய ஆதரவு பெற்றுள்ளது என்று தான் கருதுகிறார்கள்! ஏழாண்டு காலமாக, காங்கிரஸ் ஆட்சியிலே நீங்கள் கண்டதென்ன? அன்றைய உங்கள் நிலைக்கும், இன்றைய உங்கள் நிலைக்கும் என்ன மாறுதல் கண்டீர்கள்?

ஆட்சியாளரைக் கேட்டால் ஏழாண்டுக் குழந்தை என்கிறார்கள்; நம் குழந்தைகள் இரண்டாண்டுக் காலத்திலேயே நடக்க ஆரம்பிக்கிறது; பேசுகிறது! ஆனால் காங்கிரஸ் குழந்தை ஊமையாக இருக்கிறது; அதனால் தான் கூறுகிறேன்—இனி காங்கிரஸ் ஒன்றும் செய்யாது—செய்யவும் முடியாது.

அமைச்சர் எஸ். எஸ். இராமசாமி சென்ற தேர்தலில் கோழிச் சின்னத்துடன் போட்டியிட்டார்; வெற்றியும் கண்டார். எங்கே அந்தக் 'கோழி?' இன்று அந்தக் கோழியை, காங்கிரஸ், 'பிரியாணி' செய்து சாப்பிட்டுவிட்டது. வயிற்றில் கோழி கூவியதால்தான், தோழர் கோவிந்தசாமியின் "உதய சூரியன்" ஜொலிப்பிலிருக்கிறான்; நீங்கள் அவரை ஆதரித்து 'உதய சூரியன்' சின்னமிட்ட பெட்டியில் உங்கள் வாக்குகளைப் போடுங்கள். சூரியன் உயர உயர எல்லோருக்கும் நன்மை தருவதைப்போல மக்கள் நிலையும் நிச்சயமாக உயரும்.

இன்று காங்கிரஸ், பணபலத்துடன் போட்டியிடுகிறது. அதற்கு—அந்தப் பணத்துக்கு—நீங்கள் ஆசைப்பட்டால்—10 நாட்கள் சுகமாக இருக்கலாம்; பிறகு நீங்கள்தானே கஷ்டப்பட வேண்டும்?

அருமைத் தாய்மார்களே, நீங்களும் இதில் அக்கரை செலுத்த வேண்டும்; உங்கள் கணவனிடமும், நண்பர்களிடமும் பேசி முடிவு செய்யுங்கள்; உண்மைக்கும் பாடுபடக்கூடிய கோவிந்தசாமிக்கே உங்கள் ஓட்டுக்களை அளியுங்கள்.

இவரை எதிர்ப்பவர், கட்டாயப்படுத்தப்பட்டு நிற்கிறார். அதற்காக, இசைந்தது, சாதாரண விஷயமல்ல; மக்கள் சும்மா விட மாட்டார்கள். என்றைக்காவது ஒரு நாள், இத்தகைய போர், மக்களுக்கும் மதில் சொல்லியே தீரவேண்டும். மொத்தத்தில், தமிழகம் சீர்பட வேண்டுமானால், நாடு நலம் பெறவேண்டுமானால், இத்தகைய நல்லவர்கள் பணியாற்ற, மக்கள் வாய்ப்பு தரவேண்டும்."

கூட்ட முடிவில், உடுமலை நாராயண கவி அவர்கள் இயற்றிய ஓர் பாட்டும், 'சொர்க்க வாசல்', 'சுகம் எங்கே?' ஆகிய படங்களில் தான் பாடிய சில பாட்டுக்களைப் பாடி மக்களை மகிழ்வித்தார்.

முன்னாள் காலனி — நாடுகளுக்கு சம அந்தஸ்து!

பிரிட்டிஷ் தொழிற்கட்சி முடிவு

பிரிட்டனும், அது ஆதிக்கம் செலுத்திய முன்னாள் காலனி நாடுகளும், ஒரே தரமாக ஒன்று சேர்ந்து இயங்கக்கூடிய, பல இன மக்களைக் கொண்ட புதிய காமன்வெல்த் ஏற்படுத்தும் திட்டமொன்றை பிரிட்டிஷ் தொழிற்கட்சி ஒப்புக்கொண்டிருக்கிறது.

காலனி நாடுகளுக்கு சுதந்திரம் தர தொழிற்கட்சி சர்க்கார் தேதியைக் குறிப்பிட வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிர்வாகக் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கிறது.

தேசிய உணர்ச்சிகளின் எழுச்சி இக்கால வரலாற்றில் ஒரு முக்கிய கட்டம் என்றும், இந்த உணர்ச்சி நல்லமுறையில் மதிக்கப்படவில்லை என்றால் உலகில் கொந்தளிப்பும், போராட்டமும் ஏற்படுமென்றும் பிரிட்டனின் முன்னாள் காலனி இலாகா அமைச்சர் கிரிபித்ஸ் கூறினார். ஆனால், சம அந்தஸ்தை அளித்து வேலை செய்தால் அந்தச் சக்தியை, பொருளாதார—அரசியல்—சமூக முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய அம்சமாக மாற்றிவிடலாம் என்று அவர் கூறினார்.

தொழிற் கட்சி சர்க்கார் பதவியில் இருந்தபோது, வெள்ளை மாதை மணந்தமைக்காக நாடு கடத்தப்பட்ட பெச்சுவானாலாந்தின் அரசர் செரட்சே காமா வழக்கைப் பற்றி புனராலோசனை செய்யவேண்டுமென்று அவர் கூறினார்.

தொழிற் கட்சி சர்க்கார் நடைபெற்றபோது காலனி நாடுகளிடையே ஏற்படுத்தப்பட்ட நல்லுறவு, கன்சர்வேடிவ் சர்க்காரால் இழக்கப்பட்டதென்றும், அவர்களுடைய முறைகள் போலி ஏகாதிபத்தியத்தை வெளிப்படையாகக் காட்டுவதாக உள்ளதென்றும் தோழர் க்ரிபித்ஸ் கூறினார்.

10 பேரைச் சுட்டுக் கொன்ற கொள்ளைக் கூட்டம்

போலீஸ் நடவடிக்கைக்கு பழி வாங்குகிறார்களாம்!

இந்தூர், செப். 30—

மத்திய பாரதத்தைச் சேர்ந்த பாவுத் வட்டத்தில், கொள்ளைக்காரர்கள், பத்து கிராம மக்களைச் சுட்டுக் கொன்றனர் என்று தெரிகிறது.

பிரசித்தி பெற்ற கொள்ளைக் கூட்டத்தினரான மான் சிங், லக்கன் சிங் என்பவர்களின் கொள்ளைக் கூட்டத்தினரின் செயல்தான் இது என்று அதிகாரபூர்வமான அறிக்கை தெரிவிக்கிறது.

மாண்டு போன பத்து பேர்களைத் தவிர, வேறு மூன்று பேர் படுகாயமுற்றனர் என்றும் தெரிகிறது.

இக்கொள்ளைக் கூட்டத்தினர் மீது உ. பி, மத்திய பாரத் ஆகிய இரு மாநிலங்களின் போலீசார் கூட்டாக எடுத்திருக்கும் போலீஸ் நடவடிக்கைக்குப் பழி வாங்கும் நோக்கத்துடனேயே இக்கொள்ளைக் கூட்டத்தினர் கிராம மக்களைச் சுட்டுக் கொன்றனர் என்று தெரிகிறது.

கொல்லப்பட்டோர் அனைவரும் சிவிலியன்கள் என்றும், போலீசார் யாருமில்லை என்றும் தெரிகிறது.

பதீமா ஜின்னா

பாக். லீகின் தலைவி?

கராச்சி, செப். 26—

பாகிஸ்தான் முஸ்லீம் லீகின் தலைவராக, காலஞ்சென்ற முகம்மது அலி ஜின்னாவின் சகோதரியான திருமதி தோழியர் பதீமா ஜின்னா வரக்கூடும் என்று தெரிகிறது.

பாக். பிரதமரான முகம்மது அலி, தான் முஸ்லீம் லீகின் தலைமைப் பதவியை விட்டுவிடப் போவதாக செய்தி வெளியானதிலிருந்து, கராச்சி பத்திரிகைகள் எல்லாம் தோழியர் பதீமா ஜின்னாவின் தலைமையை ஆதரித்து எழுதி வருகின்றன.

'பாகிஸ்தான் ஸ்டாண்டர்ட்' என்ற முஸ்லீம் லீகின் அதிகாரபூர்வமான, பத்திரிகை தோழியர் ஜின்னா லீகின் தலைமைப்பதவியை ஏற்றுக் கொள்ளவேண்டும் என வற்புறுத்தியுள்ளது.

வேலையற்றோர் நிலைமை

1954 ஆகஸ்ட் மாதத்தில், வேலை தேடித்தரும் நிலையங்களில் வேலை உதவிகோரி புதிதாகப் பெயர் பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கையும், பெயர் பதிவைப் புதுப்பித்துக்கொண்டவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளபோதிலும், மாத இறுதியில், வேலை தேடித் தரும் நிலையங்களின் உதவியைத் தொடர்ந்து நாடுகின்றவர்களின் எண்ணிக்கை 5,99,360 ஆக இருந்தது; இந்த எண்ணிக்கை முந்திய மாதத்திலிருந்ததைவிட 10,528 அதிகமாகும்.

இந்த மாதத்தில் மொத்தம் 1,27,734 நபர்கள் பெயர் பதிவு செய்துகொண்டனர்; சுமார் 12,062 நபர்களுக்கு வேலை தேடித் தரப்பட்டது. முந்திய மாதத்தில் பெயர் பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை 1,59,578; வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 15,320. வேலை தேடித்தரும் நிலையங்களுக்குத் தகவல் அறிவிக்கப்பட்ட காலி ஸ்தானங்களின் எண்ணிக்கை முந்திய மாதம் 20,552 ஆக இருந்தது; இந்த மாதம் 17,938 ஆகக் குறைந்துவிட்டது.

மே. வங்க சட்டசபையில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'நாங்கள் எதையும், வாயை வாங்கிக்கொள்கிற மனோநிலையில் இல்லை; நீங்கள் உட்கார்ந்து என்னைப் பேச அனுமதிப்பதின் மூலம் சபையின் ஒழுங்கு நிலை வழி செய்வீர்களா?' என்று பதிலுக்குக் கேட்டார்.

'சபையின் ஒழுங்கு விதிகளை அமுலாக்குமாறு என்னைத் தூண்டுகிறீர்கள்,' என்று சபைத் தலைவர் கோபமாகக் கூறினார்.

'நீங்கள் என்ன ஒழுங்கு விதிகளை அமுல் செய்ய முடியும்? ஏதாவது விதிகளை நீங்கள் அமுல் செய்துகொண்டா இருக்கிறீர்கள்; முதன் மந்திரியின் சொல்படிதான் சபைத் தலைவர் நடக்க வேண்டுமென்பதுதான் சபையின் ஒழுங்கு விதியா, என்ன? முதலில் நீங்கள் ஒழுங்கைக் கடைப்பிடியுங்கள்; சபைத் தலைமைக்கு நாங்கள் மதிப்புத் தராதிருக்கும்படி நீங்கள் எங்களை நிர்ப்பந்திக்கிறீர்கள்,' என்று பாசு குறிப்பிட்டார்.

இந்த நேரத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள், 'சபை தொடர்ந்து நடைபெறாது செய்து விடுவோம்' என்று ஓங்காரக் கூச்சலிட்டனர்.

உடனே சபைத் தலைவர் குப்தா, 'உங்களது நடத்தை சபை விதிகளுக்குப் புறம்பானது எனத் தீர்மானித்து நடவடிக்கை எடுப்பேன்.' என்று பயமுறுத்திப் பார்த்தார்.

உடனே, பானர்ஜி என்ற கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் எழுந்து, 'நீங்கள் சொல்லுவதை நாங்கள் கேட்கப் போவதில்லை; நாங்கள் சபைத் தலைமைக்கு மதிப்பளிக்கத் தயார்; ஆனால், உங்களைப் போன்ற தகுதியற்றவர்கள், அந்த நாற்காலியில் அமர்ந்திருப்பவர்களுக்குத் தரமாட்டோம்; முதன் மந்திரியின் சொல்படி நடக்கிற எந்த ஒரு மனிதரும் அந்தத் தலைமை நாற்காலியில் அமர உரிமை பெற்றவர் அல்ல; உடனே நீங்கள் காலி செய்யவேண்டும், அந்த நாற்காலியை,' எனக் கூச்சலிட்டார்.

இந்த நேரத்தில் சபைத் தலைவர் குப்தா, ஏதோ கூறினார்; ஆனால், சபையில் நிலவிய குழப்பத்தால் அது கேட்கவில்லை.

பானர்ஜி மீண்டும் எழுந்து, தொண்டை கிழியக் கத்தினார்:—"நீங்கள் உங்களை செய்கைக்காக வெட்கப்பட வேண்டும்; சபையின் தலைமை நாற்காலியின் கவுரவத்தைப் பாழ்படுத்திவிட்டீர்கள்; உடனே நாற்காலியை விட்டு எழுந்துவிடுங்கள்,' என்று!

உடனே சபைத் தலைவர் 10 நிமிடங்கள் சபையை ஒத்தி வைத்தார்.

தோழர் குப்தா, சபாநாயகரும், உதவி சபாநாயகரும் இல்லாததினால்தான் சபைத் தலைமையை ஏற்றுக் கொண்டிருந்தார்.

இதற்கு முன் உதவி சபாநாயகர் தலைமை தாங்குகையிலும், சம்பவங்கள் வருந்தத்தக்க முறையிலேயே இருந்தன.

அபிவிருத்திக் கார்ப்பரேஷன் மசோதாவின் பிரிவுகள் மீதும் விவாதம் நடக்கையில் ஒவ்வொரு பிரிவின் மீதும் எதிர்க்கட்சியினர் திருத்தம் கொண்டுவந்தனர்.

சபையை அமைதியாக நடத்தவொட்டாது செய்வதே எதிர்க்கட்சியின் வேலை என முதல் மந்திரி குற்றம் சாட்டினார்.

இதற்காக மேலும் பத்துப் பதினைந்து நிமிடங்கள் சட்டசபையின் இருதரப்பினரும் வாய்ச் சண்டை போட்டுக் கொண்டனர்.

அதற்கு முன் சபாநாயகரே தலைமை தாங்கும்போது, 'சபை எத்தனை மணி வரை கலையாமல் கூடுவது,' என்ற விவாதத்தின் போதும், இதே நிலைதான் இருந்தது;

'இரவு 9 மணி வரை வேண்டும்,' என்றார் முதன் மந்திரி.

எதிர்க்கட்சியினர், '4 மணிக்கு மேல் நாங்கள் இருக்க மாட்டோம்,' என்றனர்.

'நாங்கள் என்றும் முதன் மந்திரியின் அடிமைகள் அல்ல, அவர் விரும்பும்படி நடப்பதற்கு,' என்று வேறு கூறினர்.

முதன் மந்திரியோ, 'சபையின் பெரும்பான்மை தனக்கு இருப்பதால்தான், தன்னால் முதன் மந்திரியாக இருக்க முடிவதாயும், எனவே, பெரும்பான்மையின் முடிவுக்கு சபையினர் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றிருப்பதால் சபை 9 மணி வரைகூடவே வேண்டும்,' என்று பெரும்பான்மையினர் சார்பில் தானே உறுதியாகக் கூறினார்.

'எதிர்க்கட்சியினருக்கு வேறு வேலை இருந்தால், அவர்கள் தாராளமாக சபையை விட்டு வெளியேறி, தங்கள் வேலையைக் கவனிக்கலாம்,' என்றும் குறிப்பிட்டார்.

இப்படி மேற்கு வங்க சட்டசபையில் குழப்பமும் கூச்சலும் மிகுந்து காணப்பட்டது.

சபையின் நடைமுறை ஒழுங்கும் விதிகளும் காற்றில் பறந்தன.

இருதரப்பினரும், சபையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமே என்ற அக்கறையே இல்லாதவர்களாக நடந்துகொண்டது கல்கத்தா மக்களிடையே ஒரு பெரும் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளது!

இரயில் விபத்தின் மேல் விவரம்

பிரேதங்கள் அழுகி விட்டனவாம்

ஹைதராபாத், செப். 30—சென்ற திங்கட்கிழமையன்று ஹைதராபாத் — காசிபேட்டில் இடையில் ஏற்பட்ட கோர இரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயருகிறது.

இதுவரை, சுமார் 138 பேர் மாண்டனர் என்று இரயில்வே அதிகாரிகள் தகவல் தந்துள்ளனர்.

29—9—54 அன்று இரவு மட்டும் சுமார் 11 பேர்களுடைய பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டனவாம்.

நதியில் மூழ்கிப்போன இரயில் பெட்டிகளை முதலையிலும் அப்புறப்படுத்தவில்லை எனவும் தெரியவருகிறது;

மாண்டவர்களின் பிரேதங்கள் எல்லாம் அழுகிப் போயிருந்தன என்றும், சில பிரேதங்கள் அரை நிர்வாணமாகக் கிடந்தன என்றும், சேற்றிலகப்பட்ட பிரேதங்கள் உருத்தெரியாமல் கிடக்கின்றன என்றும். இனி மேல் பிரேதங்கள் அகப்பட்டாலும் அவை அழுகிப் போயிருக்குமாதலால் அவர்களுடைய உறவினர்கள் வந்து அந்த இடத்திலேயே புதைத்துவிட வேண்டுமென்றும் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்களாம்.

இந்த விபத்து நடைபெற்ற இடத்திற்குப் பக்கத்திலுள்ள வயல் ஒன்றிலிருந்து, உடைக்கப்பட்டுக் கிடந்த இன்ஷூர் கவர்கள், பாக்கெட்டுகள், தபால் கட்டுகள் ஆகியவைகளைப் போலீசார் ஒரு வண்டி நிறைய கைப்பற்றி இருக்கிறார்கள். தபால் கட்டுகளில் ஏதாவது பணம் இருக்குமென்ற எண்ணத்துடன் சில ஆசாமிகள் இதைச் செய்திருக்கலாமென்று கருதப்படுகிறது.

வசந்தி ஆற்றிலிருந்தும் பல திறப்பட்ட தங்க நகைகள், பணப் பைகள், கைக்கடியாரங்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன என்று தெரிய வருகிறது.

ஒரு பிரேதத்தின் பையைச் சோதித்ததில் ரூ. 5000 ரொக்கமாக இருந்ததாம்!

சீனாவின் ஆசிய உணர்வு!

ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றல் கொண்டது!

பிரிட்டிஷ் தொழிற் கட்சிச் செயலாளர் கருத்து!

"கம்யூனிசம் அல்லது தேசியம் இவற்றைக் காட்டிலும் சக்தி வாய்ந்த 'ஆசியனிசம்' தான சீனாவில் நிலவுகிற தெனக் கொள்ளலாம்; அங்கு நிலவும் இந்த ஆசிய உணர்வு, ஆசியாவில் கம்யூனிஸ்டுச் சீனாவிற்கு மகத்தான ஆதரவைத் தேடித்தருவதாகும், காலனி ஆதிக்கத்தையும் சாண்டியையும் எதிர்த்து நிற்கவும் வழி செய்கிறது,"

—என்று அண்மையில் சீனா சென்று திரும்பிய பிரிட்டிஷ் தொழிற்கட்சி செயலாளர் மோர்கன் பிலிப்ஸ் என்பவர் லண்டன் பி. பி. ஸி. நிலையத்திலிருந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னார்:—"சீனா பொருளாதார துறையில் ரஷ்யாவுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தாலும், சீனா தனதுடைய சுதந்திரத்தைக் காத்துக்கொள்ளவே ஆசைப்படுகிறது.

'ஆசியனிசம்' என்றாலே, சீனா, ரஷ்யாவோ அல்லது வேறெந்த ஐரோப்பிய நாடுகளோ, ஆசியாவில் ஆதிக்கம் கொள்வதை எதிர்த்து நிற்கும் ஒரே பொருள் கொள்கிறது.

சீனா ஒரு கம்யூனிஸ்டு நாடாக இருக்கவேண்டுமென்று மட்டுமே கருதி எதிர்த்துக்கொள்ளவில்லை; ஏனெனில், சீனப் புரட்சி ஓரளவு தேசியத் தன்மைகொண்டதாகயிருக்கிறது.

தூர கிழக்கில் பார்மோசா ஒரு ஆபத்தான இடமாக இருக்கிறது. மூன்றாவது உலகப் போர் எனும் தீயின் முதல் பொறி அங்கிருந்தே கிளம்பக்கூடும்."

சி. பி. சிற்றரசு சுற்றுப்பிரயாணம்

அக். 2: முத்தரசநல்லூர்
,, 3: திருப்பராய்த்துறை
,, 4: அரியலூர் (நாடகம்)
,, 5: லால்பேட்டை
,, 6: பட்டுக்கோட்டை
,, 7: தோகைமலை
,, 8: சோழமாதேவி

வெளிநாடுகளில் உள்ள சீனர்களின் எதிர்காலம்!

சீனப்பிரதமர், சூ-என்-லாய் கருத்துக்கு பண்டித நேருவின் பாராட்டு

ஆனால் அவ்வழியைப் பின்பற்றுவதில் கசப்பு

இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு, மக்கள் சபையில், கடந்த புதனன்று, இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய விவாதத்தை அவக்கிலைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தென் கிழக்கு ஆசிய நாடுகளின் அச்சத்திற்கான பல காரணங்களுள், சீன மக்கள், ஏராளமாகப் பல நாடுகளிலும் வாழ்வதும் ஒன்று; மலாயா போன்ற நாடுகளில் இதனால் ஒரு மிகக் கடினமான பிரச்னை உருவாகியது.

இங்குள்ள நாம் எல்லோரும் மலாயாவின் விடுதலையை ஆதரிப்பவர்களாகவே இருக்கலாம் என நம்புகிறேன்; உண்மைதான்; ஆனால், ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது—அதுதான், மலாயாப் பிரச்னை சுலபமானதல்ல; அது மிகக் கடினமானது—என்பது!

ஏனெனில், மலாயாவின் பழங்குடி மக்களான மலாயர்கள் மக்கள் தொகையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையுடையவர்களாக, சிறுபான்மையினராக இருக்கின்றார்கள். அவ்வாறிருப்பது மிகுந்த கஷ்டங்களையும், குழப்பங்களையும் உண்டுபண்ணுகிறது.

அங்கு எந்த இனத்தவரும் தனித்துப் பார்த்தால் பெரும்பான்மையினராக இல்லை; ஆனால், சீனர்கள்தான் பெரும் அளவு வாழ்கிறார்கள்.

மலாயாவின் பூர்வீகக் குடிகளான மலாயர்கள், மலாயர் அல்லாதவர்கள் ஆட்சிக்கு வர வழி செய்கிற சம்பவங்கள் நடைபெறுவதைக் கூட கவனிக்காதவர்களாயிருக்கின்றனர்.

நான் இங்கே கஷ்டம் எப்படி ஏற்படுகிறது என்பதை மட்டுமே சுட்டிக் காட்டுகிறேன். இப்பொழுது, மலாயா, இந்தோனேஷியா, இந்தோ-சைனா, தாய்லந்து ஆகிய நாடுகளில் சீனர்கள் ஏராளமாக வசிக்கின்றனர். இந்த நிலை அந்த நாடுகளை அச்சுறுத்துகின்றது.

சமீப காலம் வரை, சீனக் குடி உரிமையை சீனர்கள் ஒதுக்கிவிட்டுச் செல்லுவதை சீன அரசாங்கமும் அங்கீகரித்ததில்லை; அதனால் ஒரு விசித்திரமான சூழ்நிலையே உருவாகியது. சில நேரங்களில் ஒருவகையான இரட்டைக் குடி உரிமை முறைகளும்கூட இருந்தன; அந்த உண்மையுமகூட, தென் கிழக்காசியப் பகுதிகளில் வசித்து வருகிற சீனர்களின் நிலையை உருவாக்குவதற்குக் காரணமாயிருந்தது; சம்மந்தப்பட்ட நாடுகளில் குழப்பத்தை உண்டுபண்ணிற்று; ஆனால், இன்று மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றிருக்கிறது.

சீனத் தலைவர்களான மா-சே-துங், சௌ-என்-லாய் ஆகியோர், வெளி நாடுகளில் வதியும் சீனர்கள் பற்றி புதிய நடைமுறை ஒன்றைக் கடைப்பிடிக்கப்போவதாகக் கூறியுள்ளதை நான் வரவேற்கிறேன்.

அந்த சீனத் தலைவர்கள், 'வெளி நாடுகளில் வாழும் சீன மக்கள், தாங்கள் வசிக்கும் அந்தந்த நாடுகளில் சீனக் குடிகளாகவே இருந்துகொள்ள வேண்டும்; ஆனால், அந்தந்த நாடுகளின் விவகாரங்களில் தலையிடக் கூடாது; அல்லது, அவர்கள் சீனாவைப் பற்றி எண்ணுவதை அறவே விட்டுவிட்டு, தாங்கள் வாழும் அந்தந்த நாடுகளின் குடிமக்களாக ஆகிவிட வேண்டும்; இதில் எந்த நாட்டுக் குடி உரிமையை யாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்,' என்று கூறியுள்ளனர்.

சீனத் தலைவர்களின் இப்புதிய கொள்கை, தென் கிழக்காசியப் பகுதிகளிலுள்ள நாடுகளில் வதியும் சீனர்களால் தோன்றும் பிரச்சினைகளைக் கவனிக்கப் பெரும் உதவியாயிருக்குமென நம்புகிறேன்."

சென்னை 4-வது வட்ட தி.மு.க. உறுப்பினர் கட்கு

3—10—54 மாலை 3 மணிக்கு தியாகராயர் பகுத்தறிவு மன்ற நிலையத்தில், சென்னை 4-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டமும், திராவிட பிரிவினை வாரா நிகழ்ச்சியும் நடைபெறும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

3—10—54 காலை 10-30 மணிக்கு, சென்னை, சாலை விநாயகர் கோயில் தெரு, எண். 17-ல், முத்தமிழ் மன்றச் சார்பில், தோழர் சந்தனபாபு தலைமையில் 'மொழியின் ஆதிக்கம்' எனும் பொருள் பற்றி பல தோழர்கள் பேசுவர்.

இளைஞர் தி. மு. கழகம் சென்னை - புதுப்பேட்டை

26—9—54ல் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், காஞ்சி கல்யாணசுந்தரனார் குமாரர் இறந்ததை வருத்தமுடன், தமிழர் போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்களின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தும் அக்டோபர் மாதத்தில் கழக முதல் ஆண்டு விழாவை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சிறப்புச் சொற்பொழிவு

26—9—54 காலை 10 மணிக்கு மதுரை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் மதுரை மீனாட்சி டாக்கீசில் சிறப்புச் சொற்பொழிவு கூட்டம் நடைபெற்றது. வழக்கறிஞர் தர்மராஜ சந்தோஷம் தலைமை தாங்கினார். தோழர் ஈ. வெ. கி. இளங்கோ "நமது நாடு" எனும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினார். தலைவர் முடிவுரைக்குப் பின் கி. ஆர். சௌந்திரராசன் பின்னணிக் குழுவினரால் இன்னிசை விருந்தளிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், [illegible] அச்சகத்தில் அச்சிட்டு [illegible] தெரு, [illegible] வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: இ. வ. [illegible]